அன்பளிப்பு. திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்கள்.

உ —1—

கடவுள் துணை.

வித்தியாபாநு

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.

தொகுதி ௧ } சௌமிய ஸு சித்திரை மீ 1909 ஷு ஏப்பிரல் மீ { பகுதி ௧

Acc. No. 248

அறிவிப்பு.

இந்த ஆறுவருஷகாலமாக 'விவேகபாநு' என்றபத்திரிகையை நடத்திவந்ததையும் நிகழும் 1909ஷு முதல் அப்பத்திரிகையை ஸ்ரீமத் நாஸ். சாமிநாதையரவர்கள் தனியாகவே நடத்திக்கொள்ளுமாறு விட்டுவிட்டேனென்பதையும் நேயர்கள் அறிவார்களே.

இப்போது வித்தியாபாநு என்றபெயர்கொண்ட இப்பத்திரிகையை நானும், மதுரை மாணவர்செந்தமிழ்ச்சங்கம் அக்கிராஸநாதிபதியும், நேடிவ்காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய ஸ்ரீமத். ம. கோபாலகிருஷ்ணையரவர்களுமாகச்சேர்ந்து மாசந்தோறும் நடத்துவதாகமுன்வந்துள்ளோம். இப்பத்திரிகை முன்னைய விவேகபாநுவின் அளவினதாகவும் சந்தா விகிதகுறைந்ததாகவும் நடைபெறுமாயினும் கலாசாலை மாணாக்கர்கட்குமட்டும் ஒரு ரூபா சந்தாவுக்குக் கொடுப்பதென்னும் ஓர் புதிய ஏற்பாட்டுடன் நடைபெறுவதாகும். நமது தமிழ்நாட்டில் இன்னமும் எத்தனைபத்திரிகைகள் தோன்றினாலும் மிகையாகாவென்பதும், நமது காருண்ய கவர்ன்மெண்டாரால் நம்மவர் அடைந்துள்ள நன்மைகளில் பத்திரிகையாலடையும் நன்மை மிகச்சிறந்ததாகும் என்பதும் நண்பர்களேயறிவார்கள்.

மாணாக்கர்கட்கு வேண்டிய வியாசங்கள் முதலியவும், பெண்பாலார்க்குவேண்டிய நல்லொழுக்கமுதலியவும், தமிழபிமானச் செல்

MAHAMAHOPADHYAYA

வர்கட்கு மகிழ்ச்சிதரத்தக்க புராணேதிகாசக்கதைச் சுருக்கங்கள் ஆரிய ஆங்கிலமொழிபெயர்ப்புகள், இன்பம் விளைக்கும் தமிழ்ப்பாக்கள், இலக்கணவிஷயங்கள், பலவகையான சமாசாரங்கள் முதலிய இனிமையான பல விஷயங்கள் இதில் பிரசுரிக்கலாகும்.

நிகழும் சௌமியஸு சித்திரைமீ முதல் ஒவ்வொரு தமிழ்மீ 30உக்குள் வெளியாகும். ஆங்கிலமும் தமிழுங்கற்ற சிறந்தபண்டிதர்கள் பலர் இதற்கு விஷயதானஞ்செய்துவருவார்கள். அந்தந்தமீ பத்திரிகை அந்தந்தமீ தவறாமல் வெளியாகத்தக்கஏற்பாடு நன்கு செய்திருக்கிறேன்.

தமிழ்ப் பாஷையினிடத்தும் என்னிடத்தும் உண்மையபிமானங்கொண்டுள்ள கனவான்கள் எல்லோரும் முன்போலவே அன்பு பாராட்டி இப்பத்திரிகையை ஏற்றுக்கொண்டு நாளுக்குநாள் அபிவிருத்தியடையச்செய்துபுகழும்புண்ணியமும்பெறும்படிவேண்டுகிறேன்.

கல்வியறிவாற்றலுடையவர்கள் தாங்கள் நுணுகியறிந்த நல் விஷயங்கள் பலவற்றையும் எழுதியனுப்புவதாகிய விஷயதானஞ் செய்தும், முன்னைப்பத்திராதிபர்கள் பலரும் தங்கள் தங்கள் பத்திரிகைகளை மாற்றுப்பத்திரிகையாக அனுப்பியும் ஆதரிக்குமாறுபிரார்த்திக்கின்றேன்.

எல்லாம்வல்ல இறைவனது திருவருளாலும், கற்றுவல்லபண்டிதசிகாமணிகளின் ஆசீர்வாதத்தாலும், கனவான்களின்பொருளுதவியாலும், சந்தா நேயர்களின் அபிமானத்தாலும் இவ்வித்தியாபாநு மேன்மேலும் செழித்தோங்குவதாக. சுபம்.

இங்ஙனம்,

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்,
வித்தியாபாநுப்புரப்ரைட்டர்,
251 வடக்காவணிமூலவீதி, மதுரை.

மதுரை மீனாக்ஷி திருக்கல்யாணம்.

கல்யாணம் என்பது சுபம் திரவியம்முதலியபலபொருளைத்தருமேனும் இவ்வுலகில் இல்லறதருமத்தை நடத்துதற்கு விரும்பியமணமகனும் மணமகளும் ஒத்தகருத்துடையவராகி வேதவிதிப்படி விவாகம் செய்துகொள்வதாகிய கிரியையையே முதலில் விளக்கிநிற்பதாம் திரு என்னும் அடைமொழியோடுகூடி திருக்கல்யாணம் எனக்கூறுமிடத்துக்கடவுளர்மாட்டுநிகழ்வதாகிய அக்கிரியையைபுணர்த்துவதாகி அக்கடவுளர்களில் தலைமைபற்றிக்கருணாநிதியாகிய சிவபெருமான் ஸ்ரீபார்வதிதேவியாரை மணம்புரிந்து கொள்வதையே குறிப்பிடும். இஃதென்ன ஆச்சரியம்! இவ்வுலகில்பிறந்து வளர்ந்து ஆகாரநித்திரையாதிய அனுபவங்கொண்டு புத்திரர்களைப்பெற்று நரைதிரைமூப்பாதியதுயரமுறுகின்ற நமக்குத்தான் உலகவாழ்க்கைநன்றாகநடைபெறுவதற்கு விவாஹம் இன்றியமையாததாகின்றது. இவ்வாறே நிர்விகாரியாகிய கடவுளுக்கும் இதுவேண்டுவதாமோ? என்றும், இன்னும் பலவாறாகவும் சிலர் சந்தேகிக்கக்கூடும்.

இறைவன் செய்யும் கிருத்தியங்கள் யாவும் தம்பொருட்டன்றி ஆன்மாக்களை உய்யச்செய்தற்பொருட்டேயாமெனக்கொள்க. தம்பொருட்டாக ஒரு கிருத்தியஞ்செய்பவனே விகாரியாவான். ஜீவர்களெல்லாம் அறம்பொருளின்பம் வீடு என்னும் புருஷார்த்தங்களை அடையவேண்டி அவற்றில் மூன்றாவதாகிய இன்பம் இன்னதாமென்று ஆன்மாக்களுக்குஉணர்த்துதற்பொருட்டே இறைவன்திருக்கல்யாணம் நடத்திக்காட்டுகின்றதன்றித் தமக்கது வேண்டற்பாற்றன்றாமென்க. இதுபற்றியன்றேபோகியாயிருந்துயிர்க்குப் போகத்தைப்புரிவதோரார்” என்றார். இவ்வின்பம் சிற்றின்பமாகியழியுந் தன்மையது; இதைவிடச்சிறந்ததும் என்றும் அழியாததுமாகிய பேரின்பம் ஒன்றுளது. அதுதான் இறைவருடன் இரண்டறக்கலத்தல். அதைத்தான் ஆன்மாக்கள் அடையவேண்டும். ஆதலின் அம்முத்தியையருளுதற்பொருட்டே வடவாலவிருக்ஷத்தின்கீழ் தெட்சிணாமூர்

த்தியாகி ஞானயோகியற்றிச்சனகாதியர்க்குபதேசித்ததும் அவ்வாறிருக்குங்கால் உலகிலுள்ள ஆன்மகோடிகளெல்லாம் சிற்றின்பப்பற்றொழிந்து யோகுபயில்வாராயினர் என்பதும்மேற்கூறியதையே விளக்குவதாகும்.

இங்ஙனமாகுக, ஆயின் போகியாகவும் யோகியாகவும்இருக்குமிடத்து இறைவன் அவ்வவற்றிற் றொடக்குண்டிருக்க வேண்டுமே தொடக்குண்டபொழுது இறைவ இலக்கணங் குன்றுமன்றோஎன்னின், கூறுதும். நாடகசாலையில் ஆட்டுவிப்பவன் ஆடுவார் பலருக்கும் ஆடிக்காட்டுவானல்லது தான் அதிற்றொடக்குறுதவாறும், புடகிருத்தியம்செய்யும் இரசவாதியானவன் செம்பினுள்ளகளிம்பை நீக்குதற்குப்பலமருந்துகளுடன் குகையில்வைத்து நெருப்பிலிட்டுக் களிம்பைப்போக்கித் தங்கமாக்குவதல்லது தான் அக்கிருத்தியத்திற்றொடக்குறாமையும் போல இறைவனும் ஆன்மாக்களை யுய்விக்கச்செய்யும் கிருத்தியங்களனைத்தும் அவ் விறைவனைச் சிறிதும் பற்றாமை காணலாம்.

அப்படியாயினும் இறைவனுக்கு ஓரிறைவியும் இருவர்க்கும் கரசரணாதிவடிவமும் வேண்டுமே. அவ்வாறின்றி விவாகம் நிறைவேறுதலமையாதே என்னின், ஆம்: வினைவசத்தாலாக்கப்பட்டுப்பல மாசும் கருக்குழியிற்றுயருற்றுப் பிறந்துபிணிபசியாதிய துயரங்கொண்டு அழிவெய்துவதாகியசப்ததாதுக்களால் அமைந்த நமது புலாலுடம்பைப்போலன்றி, ஒருவராலாக்கப்படாமலும் கருக்குழியுறுமலும்பிணியாதிய கொள்ளாமலும் என்றும் விளங்குவதாகவும் தாம் நினைத்தமாத்திரத்தே கொள்ளும் அருள்வடிவமே இறைவர் திருவுருவென்றும், அவரது அருட்சத்தியே பார்வதியின் திருவுருவென்றும் இவ்வித இருவேறு திருவுருவங்களும் இரண்டாக அமைந்து திருக்கல்யாணம் நிகழக்கொள்வதன்றி ஒன்றாகவேயமைந்து அர்த்தநாரீசுரராகவும் இருத்தல்காண்க. இறைவனும் இறைவியும் மணியும் ஒளியும்போல அபேதமாவரெனக்கொள்க. இவ்விஷயம்விரிக்கிற்பெருகும்.

திருவிளையாடற் கதைச்சுருக்கம்.

விஞ்சையர்தலைவனான விச்சுவாவசுவின் புத்திரி விச்சாவதியென்பவள் மதுரையம்பதியில்வந்து உமாதேவியாலன்பு செலுத்தித் தோத்திரஞ்செய்ய லோகமாதாவான அம்பிகை 4-வயதுக்குழந்தையாக அவள் முன் எழுந்தருளி உனக்கு யாதுவேண்டுமெனக்கேட்க அன்னையே! இத்திருவுருவமிருந்தவாறேஎனக்குப்புத்திரியாகவந்தருளவேண்டுமெனக்கேட்டனள். அம்பிகையும் அவ்வாறே ஆகுகவென்று நீ மானிட ஜென்மமெடுத்து மலையத்துவச பாண்டியராசனுக்கு மனைவியாகவருவாய் அப்போதுன்புத்திரியாக வருவோமென்றுதிருவாய்மலர்ந்தருளி அந்தர்த்தானமாயினள். அவ்விச்சாவதியேமலையத்துவசபாண்டியன் மனையாகிய காஞ்சனமாலையாகப் பிறந்திருந்தாள். மலையத்துவசபாண்டியன் புத்திரப்பேறில்லாக் குறைதவிர்க்க விரும்பிப் புத்திரகாமேட்டியாகஞ்செய்ய அந்தயாகத்தில் அம்பிகை முன் கொடுத்த வரத்தைநிறைவேற்றத் திருவுளங்கொண்டு 3 ஸ்தனங்களுடன்கூடிய 4 வயசுக்குழந்தையாகத் திருவவதாரஞ்செய்தருளினள். அத்தெய்வக்குழந்தையை யெடுத்தணைத் தின்புற்ற அரசன் இயற்கை விரோதமாக ஒரு தன மிக இருக்கக்கண்டு புத்திரப்பேறு விரும்பியாகஞ்செய்தேன், அதுவுமொரு பெண்மகவைத்தந்தது. அப்பெண் மகவுக்கிங்ஙனம் ஒருறுப்புமிக்குளதே எனக்கவலையுற்றனன். அப்போது அரசனே கவலையுறேல். இம் மகவைப்பெண்ணெனக்கருதாது தடாதகையெனப்பெயரிட்டு ஆண்மகவுக்கியற்ற வேண்டிய சடங்கெல்லாம் செய்வித்திடுக. இக்குழந்தைக்கு நாயகன் வருங்கால் ஒரு தனம் மறைந்துவிடும் என்று அசரீரி (ஆகாயவாணி) கூறக்கேட்ட மன்னனும் பிறரும்மனக்களிப்பெய்திப் பலவேறு சிறப்பும் நல்வகையாற்றி வளர்த்து வந்தனர்.

தடாதகைப்பிராட்டியார் சகல கலைஞானங்களையுமுணர்ந்து வளர்ந்துவரும்போது விதிவசத்தால் மலையத்துவசபாண்டியன் விண்ணுலகெய்தினன். தடாதகைப்பிராட்டியாரே தந்தைக்குச்செய்யும் அபரக்கிரியைகளனைத்தும்செய்து முடிபுனைந்து செங்கோல்செலுத்திவருங்கால் திக்குவிஜயம் செய்யக்கருதி நால்வகைப்படைகளும்

மந்திரிமுதலியபிறரும் புடைசூழச்சென்றுஎல்லாத்திசைகளையும்வென்று வடதிசைக்கேகிக்கயிலைபங்கிரிப்பக்கமுற்றுப் போர்க்கோலத்துடன்வந்த நந்தியெம்பெருமானுதியரைவென்று நிற்க, பரமேசுரனே அமர்க்கெழுந்தருளினர். எம்பெருமானை யுத்தகளத்திற் கண்டவெல்லையில் தடாதகைப் பிராட்டியின் ஒருதனம் மறைவுற்றது. உடனே அம்மை நாணுற்று நிற்க அதுகண்ட மந்திரியானவர் முன் அசரீரிகூறியதை நினைந்து இவரே நினக்கு நாயகரெனக்கூறினர். எம்பெருமானுர் அருட்புன்னகைகொண்டு அம்பிகையைநோக்கிநீமதுரைக்குச்செல். வருகிற சோமவாரத்தன்று யாம் எமது பரிவாரங்களுடன் அங்கு வந்து நின்னை மணம்புரிவோம் என்று கட்டளையிட்டு மறைந்தனர். தடாதகைப்பிராட்டியாரும் மதுரையையடைந்தார். விவாகத்துக்குரிய எல்லாச் சிறப்பும் மிகப்பெருமிதமாக நடக்க, சோமவாரத்தன்று சிவபெருமான் எழுந்தருளி தடாதகைப்பிராட்டியார் திருக்கல்யாணங்கொண்டு தாமேமுடிபுனைந்து சோமசுந்தரபாண்டியராகி அரசு செலுத்தினர் என்பது திருவிளையாடற்புராணம்.

அன்றியும் வேண்டுவார் வேண்டுவதேயுதவும் பரமகருணாநிதியாகிய சிவபிரான் தம்மை வழிபட்டு விரும்பியதக்கனுக்கும் பர்வதராஜனுக்கும் மலையத்துவசபாண்டியனுக்கும் வலைபராஜனுக்கும் லோகமாதாவாகிய எம்பெருமாட்டியை புத்திரியாகத்திருக்கோலங்கொண்டு அங்கங்கு எழுந்தருளச்செய்து தாமே மணவாளராக எழுந்தருளி உலகுய்யும்படி திருக்கல்யாணத்தை முடித்தமை உலகறிந்ததொன்றேயாம்.

சிவாலயங்கள்தோறும் திருவிழாக்காலத்தில் திருக்கல்யாணம் நடத்தப்படுவதுண்டேனும் அவையாவும் மற்றோரிடத்தில் நடத்திய திருக்கல்யாணக்காட்சியை ஓரடியார்பொருட்டு அவ்வத்தலங்களில் அருளியனவேயாம்.

பூலோககைலாசமாகிய இம்மதுரையம்பதியில் நடக்கும் ஸ்ரீமீனாக்ஷி திருக்கல்யாணமானது ஏனையதலங்களில் நடப்பதிலும் மகா விசேஷமுடையதாகும். ஏனெனில் இத்தலத்தின்கண்ணே மலையத்துவஜ பாண்டிய ராஜபுத்திரியாக ஸ்ரீ உமாதேவியார் திருவவதாரஞ்செய்து முடிபுனைந்து செங்கோல்செலுத்தித்திக்குவிஜயம்செய்து பரமகருணை

நிதியாகிய சிவபெருமானே யெழுந்தருளிவந்து திருக்கல்பாணம் செய்யப்பெற்றுள்ளதாதலால் என்க.

மூலப்பிரதிக்கும் படிப்பிரதிக்கும் (அசலுக்கும் நகலுக்கும்) உள்ள தாரதம்மியம் இத்தலத்தே நிகழும் இத்திருக்கல்யாணத்துக்கும் ஏனையதலங்களில் நடக்கும் திருக்கல்யாணத்துக்கும் உண்டென்று கூறினாலும் தக்கதாம்.

நிகழும் சௌமியஸ்ரீ சித்திரை௴ ௨௰௳ ஞாயிற்றுக்கிழமையன்று காலை தடாதகைப்பிராட்டியாரும் சோமசுந்தரக்கடவுளும் திருமணக்கோலம் பூண்டருளி திருக்கோயிலிலங்கங்கு அமைக்கப்பெற்ற மண்டபங்களிற்றங்கி யுபசாரங்களையேற்று மஞ்சள் நீராடி சித்திரைவீதியிலெழுந்தருளி முத்துராமையர் மண்டபத்திற் கன்னியூஞ்சலாடி வெ. இராமநாதன்செட்டியாரவர்கள் உள்ளன்புடன்திவ்யாலங்காரப்படுத்தி யமைத்த கல்பாணக்கொட்டகையிற் புகுந்து "அங்கம் ஆறுமே கால்களாய் முதலெழுத் தம்பொற்பீ டிகையாகித், துங்க நான்மறை நூல்களே நித்திலந் தொடுத்தசை தாம்பாகி, எங்க ணாயக னெம்பெரு மாட்டியோ டிருப்பதற் குருக்கொண்டு, தங்கி னாலென" திருமலைநாயக்கரவர்களால் நிர்மாணிக்கப்பெற்ற திருக்கல்யாணமண்டபத்திலுள்ள மாமணித்தவிசில் திருப்பரங்குன்றத்திலிருந்து வந்த ஸ்ரீ முருகபிரான் பக்கத்துள்ள ஆசனத்தில் வீற்றிருக்கத் தாமும் எழுந்தருளிப் போகரூபியாயிருந்து எல்லா ஆன்மாக்களுக்கும் போகங்களைபருளுதற்பொருட்டுத் திருக்கல்யாண மஹோத்ஸவத்தை முடித்தருளுவார்.

"இணரெரித்தேவுந்தானேயெரிவளர்ப்பவனுந்தானே
யுணவுகொள்பவனுந்தானேயாகியவொருவன்வையம்
புணர்வுறுபோகமூழ்கப்புருடனும்பெண்ணுமாகி
மணவினைமுடித்தான் அன்னான் புணர்ப்பையார்மதிக்கவல்லார்!

இத்தகைய திருக்கல்யாணமஹோத்ஸவ தரிசனை செய்யப்பெற்றவர்கள் இம்மையின்பமும் மறுமைப்பேறும் பெற்று நீடுவாழ்வார்கள்.

சுபம்! சுபம்!!

பத்திராதிபர்.

வாக்கியத்தொடைநோக்கு.

வாக்கியத் தொடைநோக்காவது வாக்கியத் தொடுத்தற்சிறப்பு. வாக்கியமாவது செய்யுள் வடிவின் வேறாகச் செய்யப்படும் சொற்களின் கூட்டம். பொருட்குந் தனக்குமுள்ள சம்பந்தமாகிய வலியுடையதே சொல்லெனப்படும். வாக்கியம், கத்தியம், வசனம், சொற்றொடர் என்பன ஒருபொருட்கிளவிகள் என்பர். வாக்கியம் என்று வரையப்படுவனவெல்லாம் அவாய்நிலையும், இயைபும், அண்மையும் உடையனவாயிருத்தல் வேண்டும். அவாய் நிலையாவது வாக்கியத்திலே தொடுக்கப்பட்டு நிற்குஞ் சொற்கள் தம்முள்ளே ஒன்றையொன்று விரும்பிநிற்குந் தன்மை. இயைபாவது வாக்கியத்திலே நிற்குஞ் சொற்களின் பொருள்கள் இடையறவுபடாது தம்முள்ளேஇணங்கி நிற்குந்தன்மை. அண்மையாவது வாக்கியத்திலே நிற்குஞ்சொற்கள் இடையீடின்றி அடுத்து நிற்குந் தன்மை. இடையறவுபடாமல் உச்சரிக்குந் தன்மையும் அதுவேயாம்.

ஆற்றலில்லாத சொற்கள் கருதிய பொருளை வெளிப்படுத்தமாட்டா. "பாய்மாவிவர்ந்து" என்புழிப் பெறப்படும் பொருள் மாவிவர்ந்து என்புழிப் பெறப்படமாட்டாது; ஆற்றலில்லை. ஆற்றலுள்ளவாயினும் அவாய்நிலை முதலியனவும் வாக்கியம் எனப்படற்கு இன்றியமையாதனவாகும். கரி, பரி, தேர், காலாள் எழுந்தன என்னும் வாக்கியத்தைக் கரி, நரி, தோணி, கார் எழுந்தன என்றால் அது அவாய்நிலையில்லாதனவாகும். நெருப்பாலே சுடுக என்பதனை நெருப்பாலே நனைக்க என்றால் அவ்வாக்கியம் இயைபில்லாதனவாகும். மலைதீயுடையது; தேவதத்தனாலே உண்ணப்பட்டது என்பதனை மலையுண்ணப்பட்டது; தீயுடையது தேவதத்தனால் என்றால் அவ்வாக்கியம் அண்மையில்லாதனவாகும்.

வாக்கியங்களை எழுதுவாருடைய கருத்து யாது? தாம் கருதிய பொருளைக் கருதியவாறே பிறருக்கு வெளிப்படுத்தவேண்டும் என்பதன்றோ! சொற்களும், சொற்றொடராகிய வாக்கியமும் தவறுறுமாயின்; அவர் கருதிய பொருள் கருதியவாறே பிறர்க்குப் புலப்படு

யாறு எப்படி? ஆகலால் வாக்கியமெழுதுவோர் அறிவிக்கக் கருதிய பொருளை முன்னரே முறைப்பட மனத்தில் அமைத்துக்கொண்டு பின்னர் எழுதல்வேண்டும். எழுதியபின்னர்த் தம்வாக்கியத்திலே நிற்குஞ் சொற்களைப் பரீக்ஷித்து வழுச்சொற்களும், பிறபாஷைச் சொற்களும் தோன்றுமாயின்; அவைகளை விலக்கல் வேண்டும். அவாய்நிலை முதலியவற்றின் அமைவுகளையும் நோக்கல்வேண்டும். அப்பால் வாக்கியவியைபு, பொருளியைபு முதலியவைகளையும் நோக்கல் வேண்டும். குற்றங்கள் பற்றியிருக்கும் வாக்கியம் நோக்குடையதாகாது.

இக்காலத்திலே செய்யப்படும் நூல்களுக்குள்ளே பெரும்பாலனவும், பாடசாலைப்புத்தகங்களும், மாசிகபஞ்சிகை முதலியனவும் வாக்கியவடிவமாகவே எழுதப்பட்டு வருகின்றன. ஆகலால் வாக்கியங்களைப் பிழைபற எழுதும் பயிற்சியும் அவசியம் வேண்டியதே. தமிழ்ப்பாஷையிலே முற்காலத்தில் வாக்கியரூபமாக நூல்செய்யும் வழக்கின்மையால் வாக்கியவடிவங்களை எழுதுதற்கு வேண்டும் விதி கூறும் நூல்களும் இலவாயின. வாக்கிய இலக்கணம்இக்காலநாகரிகத்திற்கு இயையுமாறு வாக்கியம் எழுதும் முறைகளைக்காட்டி "வசனத்தொடை" என்னும் பெயருடன் முதற்புத்தகம் ஒன்று நல்லூர் ஸ்ரீமான். த. கைலாசப் பிள்ளையவர்களாலே எழுதி அச்சிடப்பட்டிருக்கின்றது. தமிழ்ப் பாஷையிலே வாக்கியம் எழுதுவோர் யாவரும் அதனை வாங்கிக் கற்பது நல்லது. பத்திராதிபர்கள், பாடசாலைப் புத்தகம் எழுதுவோர்கள் முதலியோர்க்கு அது விசேடமாக வேண்டியதேயாம்.

முற்காலத்திலே தமிழ்ப்பாஷையிலே நூல்களெல்லாம் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும்பாக்களாலே பெரும்பாலும் செய்யப்பட்டன. வெண்பாவாலும், ஆசிரியப்பாவாலும் செய்யப்பட்ட நூல்களே பெரும்பாலன. நூல்கள் மாத்திரமோ விஞ்ஞாபனம், கண்டனம் முதலியனவுஞ் செய்யுளிலே அமைக்கப்பட்டன. பிற்காலத்திலே விருத்தம், கட்டளைக்கலித்துறை முதலிய பாவினங்களிற் செய்யப்படும் நூல்கள் பலவாயின. இக்காலத்திலே கலிப்பாவிலும், வஞ்சிப்பாக்களிலும் நூல் செய்வோரைக் காண்டல் அரிது. அந்தப்பாக்களைக் காண்டலும் அரிது.

வடமொழியிலோ வாக்கிய வடிவமாகிய நூல்கள் முற்காலத்தி லும் உள்ளன. வடநூலார் வாக்கியத்தை முத்தகம் என்றும், விரு த்தகந்தி என்றும், உற்கலிகாப் பிராயம் என்றும் சூர்ணகம் என்றும் நான்காகப் பிரிப்பர். அவற்றுள்ளே முத்தகமாவது உருபு முதலியன தொக்குநிற்றலின்றி விரிந்துநிற்றலுடைய வாக்கியம். விருத்தகந்தி யாவது செய்யுளின்பாகமும் இடையிடையே சேர்ந்துவரும் வாக்கி யம். இவ்வாக்கியம்பரிமேலழகருரையிலும், சிவஞானபோத மாபாடி யத்திலும் ஆங்காங்கு வருகின்றன. "அமிழ்தினுமாற்றவினிதே" என்னும் குறளுரையிலே "சிறுகையானளாவலாவது இட்டுந்தொ ட்டும் கௌவியுந்துழந்தும் நெய்யுடையடிசின் மெய்படவிதிர்த்தல்" என்பது விருத்தகந்தி. சிவஞான போதத்திலே எட்டாஞ் சூத் திரத்திலே முதலாம் அதிகாரத்திலே "விழுச்சுடர்ச் செம்பொன் மேருமால்வரையைத் தலைப்படலுறுவாராய்" எனவரும் உரைவா க்கியமும் விருத்தகந்தி. உற்கலிகாப் பிராயமாவது உருபு முதலிய வற்றின் தொகைமிகவரும் வாக்கியம். சூர்ணகமாது தொகைமிக வருதலின்றிச் சொற்பமாகவரும் வாக்கியம்.

வாக்கியம் எழுதுதற்குப்பயில்வோர் யாவரும் பரிமேலழகரு டைய உரைவாக்கியங்களையும், சிவஞான சுவாமிகளுடைய உரைவா க்கியங்களையும், ஆறுமுகநாவலரவர்களுடைய வாக்கியவடிவமாயுள்ள நூல்களையும் பலமுறை படித்துப் பயிலுதல்நல்லது. வாக்கியமா னது நோக்கமையாது வழுப்படுமாயின்; அதனால் அறிவிக்கப்படும் பொருளும் தவறுறும்.

இங்ஙனமே வாக்கியத்தொடையை விரித்துக் கூறப்புகின் இன்னும் விரியும். சமயம் வாய்ப்புழிக் கூறப்படும்.

இங்ஙனம்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

சுன்னாகம்.

நூதன வித்தியா விதிகள்.

நமது காருண்ணிய கவர்ண்மெண்டாரவர்கள் எலிமெண்டரி கல்விவிஷயமாய் இப்பொழுது விசேஷ கவனம் செலுத்திவருகிறார்களென்பது யாவருமறிந்தவிஷயமே. தற்காலத்தில் பள்ளிக்கூடப் படிப்பும் வெளியே நாடோடிய காரியமான ஜீவியமும் ஒன்றுதான் என்று பாலர்களுக்கு சிறுபிராயமுதல் அனுபோகமுறையில் கற்பிக்குமபொருட்டு சென்னை வித்தியா இலாகா டைரெக்டர் துரையவர்கள் "Scheme of Studies of Elementary Schools" என்று புது வித்தியாவிதிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஆகையால் எலிமெண்டரி ஸ்கூல் உபாத்தியாயர்களின் தகவலின்பொருட்டு இங்கிலீஷில் உள்ளவைகளை தமிழில் மொழிபெயர்த்து அடியிற்கண்டவாறு கூறுகின்றோம்.

1. The Vernacular. சுதேசபாஷை.

இதில் தெளிவாய் வாசிப்பதோடு, வாசித்த பாகத்தை வாய்மொழியாய்ச்சொல்வதும், வாக்கியகர்ணம் செய்வதும், வழக்கமான கடிதம் தொடங்க, முடிக்க, விலாசம் எழுதத்தெரிவதும் அடங்கும்.

(a) வாசிப்பு:—(Reading) அச்சுப்புஸ்தகம் வாசிப்பதுடன், தொடரெழுத்தாய் எழுதிய கையெழுத்துப்பிரதியை வாசிக்கவும், வாசித்தபாகத்தின் பொருளை விவரமாய்ச்சொல்லவும் தெரியவேண்டும். வாசித்தபாகத்தை அடிக்கடி திருப்பிவாசிப்பது உசிதமன்று.

(b) வாக்கியகரணம் :— (Composition) வாசித்த ஒருபாகத்தையாவது, வாய்மொழியாய்ச் சொல்லப்பட்ட ஓர் கதையையாவது, தன்முன் வைக்கப்பட்ட ஓர் படத்தைப் பார்த்தாவது, வாயினாலோ, எழுத்தினாலோ அதின்பொருளை எழுத அல்லது சொல்லத் தெரிதல்.

(c) எழுத்தும், எழுத்துக்கூட்டலும்:—(Writing and Spelling) இதன் திறமை, வாக்கியகரணம் எழுதுவதினால் தெரியவரும். பின்

ளைகள் மையினல் கடுதாசியில் சொல்ல எழுதவும், பார்த்தெழுதவும் தெரியவேண்டும்.

குறிப்புக்கள் (1) சுயபாஷையை பிழையற வாசிக்கவும் தெளிவாயும் தாராளமாயும் பேசவும் தெரியவேண்டும்.

(2) கேள்விகளுக்குச் சொல்லும் உத்தரங்கள் தெளிவான நல்லபாஷை நடையில் சொல்லத் தெரியவேண்டியதவசியம்.

(3) கையெழுத்து துலக்கமாயும் விரைவாயும் பிழையின்றி அழகான அக்ஷரசுத்தியாக எழுதவேண்டும்.

(4) அச்சுக்காப்பிகள் வேண்டுமென்பது அவசரமில்லை. உபாத்தியாயரே முதல்வரி பாரம்வைத்துக்கொடுக்கலாம். காப்பி ஒழுங்காக எழுதாமலிருந்தும், கையெழுத்து நல்லதாயிருந்தால் உபாத்தியாயர் மெச்சிக்கொள்ளப்படுவார்.

2. Space and Number work. இடம்,எண் வேலை.

சாதாரணக்கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் இந்து நாணயத்திலும் அப்படியே கடைக்கணக்குகள், சென்னை இந்து இங்கிலீஷ் நிறையளவு கணக்குகள், நீட்டலளவு, சதுரஅளவு கணக்கு இந்து இங்கிலீஷ் கால அளவு, பின்னமும் அதன் விவரமும் 12,·16 இவற்றின் காரண எண்களை பகுதி எண்ணுகக்கொண்ட பின்னங்களைக்கூட்ட, கழிக்க, பெருக்க, பிரிக்க, சாமான்களை வாங்குவதிலும் கொடுப்பதிலும் உள்ள கணக்கு விவரங்கள் முத்தொனிகவினுவில் லேசான கணக்குகள்.

குறிப்பு:—கைத்தொழில், விளையாட்டு, தேகாப்பியாசம் இவைகள் மூலமாய் இலக்கங்கள், ஸ்தானம் இன்னதென்றும், எழுத்து மூலமாய் கணக்குகள் படிப்பிக்குமுன் பொருள்களைக் கொண்டே, கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் இவைகளை பாலர்வகுப்பிலும் முதல்வகுப்பிலும், படிப்பிக்கவேண்டியது. மனேமுயற்சி ஸ்திரமடைவது, கணிதசாஸ்திரத்திற்குப் காரியமாகையால் அதை ஞாபகபாடமாக்கக்கூடாது. ஞாபகசக்தியை விர்த்திசெய்து மனக்கணக்குகளை அதிகமாய் உபயோகிக்கவேண்டும்.

3. General Knowledge. பொது அறிவு.

இது நான்கு வகைப்பட்டது.

(a) அந்தந்த இடங்களிலுள்ள செடிகள், மிருகங்கள் சீதோஷ்ணஸ்திதி அதற்கேற்ற விளைபொருள்கள், வியவசாயமுறைகள், கைத்தொழில்முறைகள் முக்கியகட்டிடங்கள், ஸ்தலஅதிகாரிகளின் வேலைகள்.

(b) தபாலபீசின் விதிகள்.

(c) சுகாதாரசம்பந்தமான சுலபமான முறைகள்.

(d) சன்மார்க்க ஒழுக்கநடக்கைகளைப்பற்றிய அறிவு, தீர்வை, தர்க்காஸ்து, பட்டா இன்னதென்பது, பட்டாமாற்றுதல், தீர்வைவஜா இவைகளின் விவரமும் தெரியவேண்டும்.

குறிப்பு:—ஒவ்வொரு பாடசாலையிலும் நம்மையாளும் சக்ரவர்த்தியவர்களின் படம் வைத்து "நாஷனல் ஆந்தம் "என்ற ராஜகீதமாவது அந்தப்பொருளுள்ள வேறு பாட்டாவது படிப்பிக்கப்படவேண்டும்.

4. Drawing—சித்திரம்.

பிள்ளைகளின் கவனத்தை அதிகப்படுத்தவும், பொருள்களை ஒத்துப்பார்க்கவும், ஞாபகத்தை உண்டாக்கவும், புத்தி விசாலமாகவும் இது ஏற்ற முறையாகும். கையால் படம்வரைதல் (Free hand and Free arm Drawing) முதலிய சித்திரங்களை வரைய அபூர்வசக்திவேணுமென்று நினைக்கவேண்டாம். இயற்கைப்பொருள்களைப் பார்த்து அல்லது அவைகளைக்காட்டும் படங்களைப்பார்த்தும் ஞாபகத்திலிருந்தும் எழுதிப்பழகக்கைதிருந்தும்.

குறிப்பு:—அதிபால்யத்தில் பிள்ளைகளை அட்சரங்களை எழுதப்பழக்குவதுபோலவே சித்திரங்களை எழுதவும், பழக்கலாம். கைவிரலால் முதலில் மணலின்மேல் வளைவான கோடுகள், நேர்கோடுகள்,

எழுதப்பழகிப் பின்பு சிமைச்சுண்ணும்பால் பலகையில் எழுதப்பழகி அப்பால் இவ்விரண்டு கோடுகளையும் சேர்த்து தனக்குத்தெரிந்த உருவங்களின் வடிவை குறிப்பாய் எழுதப்பழகலாம். அளவுகோல்களின் உதவியைத்தேடாமல் கண்பார்வையாய்வடிவங்களின் அளவை நிதானிக்கவேண்டும். வரவர தைரியமாயும், தீவிரமாயும் எழுதப்பழக்கவேண்டும்.

5. Recitation—செய்யுள்

இதை அந்தந்தப் பாட்டுக்குரிய தக்க இராகங்களுடன் படிக்க வேண்டும். 50-பாட்டுகள் பாடமாகவேண்டும்.

அல்லது

ஞானப்பாட்டுகள் படிக்கலாம். இந்தப்பாட்டுகள் இன்ஸ்பெக்டர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கவேண்டும்.

6. Physical Exercise—தேகாப்பியாசம்.

I. டிரில்லும் தேகாப்பியாசமும் என்பதில் முறையே நடக்தல் கையில் கொடிவைத்தாட்டல், கை கால் அசைவுண்டாக்கும் அப்பியாசங்கள்.

II. இந்துதேச ஜிம்நாஸ்டிக் அல்லது விளையாட்டுகள்.

III. விளையாட்டுகள், நடனம், குதிஓட்டம், மல்லு ஆகிய இவைபோன்ற விளையாட்டுகளடங்கும்.

எந்த மானேசரும் ஜாபிதாவையும்,காலஅட்டவணையையும் அந்தந்த இடத்தின் அவசியத்திற்குத்தகுந்தபடி தயார்செய்யலாம். அப்படித்தயார்செய்த இவ்விரண்டையும் அந்தந்த சரகம் விசாரணை அதிகாரிகள் ஒப்புக்கொண்டபின் பள்ளிக்கூடங்களில் உபயோகிக்கவேண்டும்.

வி. எஸ். கிருஷ்ணசாமி அய்யர்.

சிவமயம்.

சுத்தாத்துவிதசைவசித்தாந்தம்.

புறச்சமயநெறிநின் றுமகச்சமயம்புக்கும் புகன்மிருதிவழியுழன் றும்புகலுமாச்சிரம, வறத்துறைகளவையடைந்துமருந்தவங்கள்புரிந்து மருங்கலைகள்பலதெரிந்துமாரணங்கள்படிந்துஞ், சிறப்புடைய புராணங்களுணர்ந்தும்வேதச் சிரப்பொருளைமிகத்தெளிந்துஞ்சென் றுற்சைவத்,திறத்தடைவரிதிற்சரியைகிரியாயோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற்சிவனடியைச்சேர்வர்.

உலகத்திலே காலாந்தரங்கடோறு மெண்ணிலாச்சமயங்கடோன்றி, அவ்வொவ்வொன்றுந் தனித்தனி தானே மெய்ச்சமயம், தானே கடவுளாலருளப்பட்டது, தன்னை யொழிந்தன வனைத்துஞ் சர்வ குசமசக்கேயாமென்று சாதித்துத் தத்தங் கோட்பாட்டை நிறுத்தும். அவ்வச் சமயானுசாரிகளும் அங்ஙனமே தத்தஞ் சமயமே மெய்யெனச் சாதிப்பான் புகுவர். இங்ஙனமேயாகக், கரைகாணற்கரிய சமுத்திரமேபோலப் பரந்து விரிந்த சமய கோடிகளையெல்லா நோக்கித், தக்க கருவிநூலுணர்ச்சியுஞ் சமயநூலுணர்ச்சியுமில்லாத நம்மவர்களெல்லாம், அவற்றினுண்மைகண்டுணரும் வன்மையின்மைகாரணமாக மயங்கி யிடர்ப்படுவாராயினர். மனுடரைச்சிறப்பிப்பது யுத்தி, யுத்திக்காதாரம் தக்க கல்வியறிவும், பிரமாண அனுபவமு முதலியனவாம். இங்ஙனமாய பிரமாணுனுபவங்களைக் கொண்டாராய்ந்து, மெய்யெனக்கண்ட சமயத்தை யனுசரித் தொழுகி, அதுவாயிலாகப் பாசநீக்கத்துச் சிவத்துவப் பேறடைதலாகிய பரமுத்திபெறுதலே மானுடப் பிறவி பெறுதலாலடையும் பெரும் பேறும். பாசபந்த துக்கத்தினீங்கிப் பரம சுக மடைந்திருத்தலே முத்தியாம். இங்ஙனமாய பரமுத்தியைத் தடையின்றித் தரவல்லது நமது சுத்தாத்துவித சைவசித்தாந்த சமயமேயாமென்பதனைப், பிரமாணசகிதமாக நமது சிற்றறிவுக் கெட்டியவாறு ஈண்டு மிகச் சுருக்கி விளக்கிக்காட்டுவாம்.

வேதஞ் சிவாகமமென்னு மிரண்டுமே நமதிறைவராகிய சிவபெருமானலருளிச்செய்யப்பட்ட முதனூல்களாம். அவற்றுள், வேதம் பொதுநூலென்னவும், ஆகமஞ் சிறப்புநூலெனவுங் கொள்ளப்படும், அது, "வேதமொ

டாகமம் மெய்யாமிறைவனூலோதும் பொதுவுஞ் சிறப்புமென்றுன்னுக" என்னுந் திருமூலநாயனர் திருவாக்கினலே நன்ருகச் சாதித்து நிறுத்தப்படும். வேதம் பொதுநூலாதலின் உலகத்திலேயுள்ள புராதன சமயங்களெல்லாம் அதனுளடங்கியுள்ளனவேயாம். மக்களினறிவுங் கோட்பாடுகளுங் கன்மங் காரணமாகப் பலதிறப்படுதலின், அவ்வவர் பரிபக்குவத்துக் கேற்றவாறு பெருங்கருணைக் கடலாகிய சிவபெருமானும், சோபானமுறையே ஞானசிகரத்துக் கேறிச்செல்லும் ஏணிபோலப் பலவாறு பொருள்கொள்ளுமாறு வேதத்தைப் பொதுநூலாக அருளிச்செய்தனர். ஆகவே இக்காலத்து நவீனமாக எழுந்த மிலேச்சமதங்களொழிந்த ஏனையமதங்களெல்லாம் வேதத்துளடங்கியுள்ளனவேயாம். வேதத்து ஞானகாண்டப்பொருளைச் சுருக்கிவிளக்குவன உபநிடதங்களேயாம். அவ்வுபநிடதங்களுள்ளும், முடிந்த பொருளாய் முத்திபயத்தற்கருவியாயுள்ள ஞானபாதத்தைப், பரிபக்குவர் பொருட்டு விரித்து விளக்குவன சிவாகமங்களேயாம். ஆகமமெனினுஞ் சித்தாந்தமெனினுமொக்கும். சித்தாந்தம்—முடிந்த முடிவு. வேதம் பல பொருள் கொள்ளக்கிடக்குஞ் செய்யுள்போன்றுள்ளது. ஆகமம் அதன் வியாக்கியானம்போன்றுள்ளது. வேதத்துக்குப் பலரும் தத்தம் மனம்போனவழி பலவாறு பொருள்கொண்டு மயங்கி இடர்ப்படுவரெனத் தமது மூற்றுணர்வாலுணர்ந்து, பரிபாகிகள் பொருட்டாகவே சிவபெருமான் ஆகமங்களை யருளிச்செய்தனர். பின்னர்ச் சிவபெருமான் வழிப்பட்டோர் பலர் சார்புநூல்களுஞ் செய்தனர்.

இனித் தமிழர்களாகிய நாமெல்லாமீட்டிய பெரும் புண்ணியப் பேருய்க்கலியுகமுற்கூற்றிலே திருவவதாரஞ் செய்தருளிய திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் முதலிய சமயகுரவர்களுல்வரும், வேதத்து ஞானகாண்டப்பொருளையுஞ் சிவாகமப்பொருளையும் விளக்கித், தோத்திரரூபமாயுள்ள தேவாரதிருவாசகங்களை அருளிச்செய்து, பல அற்புதங்கள் வாயிலாக நமது சுத்தாத்துவித சைவசித்தாந்த சமயத்தை நிலைநிறுத்திப்போயினர். பின்னர்ச் சேக்கிழார் நாயனர் முதலிய பெரியோர், நமது சித்தாந்த சைவத்துக் கிலக்கியமாயுள்ள மெய்யடியார் சரித்திரங்களை யுணர்த்துமுகத்தானதனை நன்குற விளக்கிப்போயினர். பின்னர்த் திருக்கைலாச பரம்பரைச் சந்தான குரவரும், பொல்லாப்பிள்ளையாரது திருவருட் பிரசாதத்தைப் பிரத்தியட்சத்துப் பெற்றருளியவரும், பொய்ச்சமயங்களின் பொருளிது வீது வென்று கண்டுகழிப்பித்த காரணத்தால் மெய்கண்டதேவரென்னுஞ் சிறப்புத்திருநாமத்தைப்பெற்ற சாமுசித்தருமாகிய நங்குருநாத ரவதரித்துத், தமிழிலே நமது சித்தாந்த சைவத்துக்கொரு பேரிலக்கணம்போல் வாய்ந்துள்ளதும், ஏனையநூல்களுக்கெல்லாஞ் சிரத்தானமாய்விளங்கப்பெற்றதுள்ளதும், சரு

ங்கிய சொல்லிற் பெரும்பொரு ளாழ்ந்துள்ளதும், இலக்கண தருக்க தத்துவநூற் கோட்பாடுகட் கொரு மயிரிடை பிறழாதுள்ளதும், பன்னிரு சூத்திரமாயுள்ளதுமாகிய சிவஞானபோதத்தை யருளிச்செய்தனர். பின்னர், அவரது முதற்சீடரும், சந்தான குரவரு ளொருவருமாகிய அருணந்தி சிவாசாரியர் அச்சிவஞானபோதத்தை முதனூலாகவும், ஆசிரியர்செய்த வார்த்திகப்பொழிப்பையும் அவரதுபதேசத்தையும் சிவாகமங்களையுந் தமக்காதாரமாகவுங்கொண்டு, அதன் வியாக்கியானமாக விரித்துச் சிவஞானசித்தியாரென்னுநூலை அருளிச்செய்தனர். அந்நூலின் பெருமை "பார்விரித்தநூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே யோர்விருத்தப் பாதிபோதும்" என்னுஞ் சிவபோகசார வெண்பாவினாலே பெறப்படும். சிவஞானபோதநூலின் விசிட்டத்தை "வேதம்பசுவதன்பால்மெய்யாகமநால்வ-ரோதுந்தமிழதனி னுள்ளுறுநெய்-போதமிகு-நெய்யி னுறுசுவையா நீள்வெண்ணெய் மெய்கண்டான்-செய்ததமிழ்நூலின் றிறம்" என்னும் மேலோர் வாக்கினாற் றெளிக. இங்ஙனமே இவற்றைத் தழுவியெழுந்த ஏனைய சித்தாந்த நூல்களின்பெருமையையு மாங்காங்குத்துணர்ந்துகொள்க. சமயாதீதமாயுள்ள நமது சுத்தாத்துவித சைவசித்தாந்தநூல்களின் சுருக்கவரலாறிஃதேயாம்.

இனி நமது சித்தாந்தசைவத்தின் கோட்பாடுகளுட் சிலவற்றை இங்கேயாராய்வான் புகுவாம். நமது சித்தாந்த நூல்கள், பதி பசு பாசங்களாகிய திரிபதார்த்தங்களது உண்மைக்குப் பிரமாணமும், அவற்றது சொரூப தடத்த விலக்கணமுங்கூறி, ஆன்மாக்கள் பாசத்தினின்று நீங்கிப் பதியோடிரண்டறக்கலந்து பரமசுகமடைந்திருத்தலாகிய சுத்தாத்துவித முத்தியைச், சுருதியுத்தியனுபவங்களுக் கெட்டுணையேனும் பிறழாதவாறு கூறி விளக்கி முடிக்கும். பதியினது சொரூப லக்கணம், "சிவனரு வுருவமல்லன் சித்தினோடசித்துமல்லன் - பவமுதற் றொழில்களொன்றும் பண்ணிடுவானுமல்லன் - றவமுதல் யோகபோகந் தரிப்பவன் றானுமல்லன், இவை பெறவியைந்து மொன்றுமியைந்திடா வியல்பினானே" என்னுந் திருவிருத்தத்தினாலே பெறப்படும். முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான், சார்ந்ததன் வண்ணமாமியல்புடைய சதசத்தாகிய ஆன்மாச், சடமாகியமலத்தோடு சம்பந்தப்பட்டுத் தமது சொரூப நிலையைத் தியானித்தற் கியல்புடையதன்றேயாமென்றோர்ந்தே, தமது பெருங்கருணையினாலே கற்பிதமாந் தடத்தமாகிய மூவகைத் திருமேனிகொண்டருளினர். தடத்தம் - அயலிடத்திருப்பது. சுத்தமாயா சம்பந்தத்தாலாயது தடத்தவடிவம். இயற்கையாயுள்ளது சொரூபம். சொரூப தடத்தங்கட்கு, முறையே தண்ணீரையும் வெந்நீரையும் உதாரணமாகக்கூறி அவற்றினிலக்கணங்களைத் தெளிந்துகொள்க. இவற்றினியல்பெல்லாஞ் சித்தாந்தநூல்களி னாங்காங்குப் பரக்கக்காணத்தக்கனவேயாம். ஈண்டுவிரிப்பிற்பெருகும்.

இங்ஙனமாயிற், பதி பசு பாச விலக்கணங்களைக் கூறு மேனைய சமய நூல்களையு மெய்யெனக் கொண்டவற்றின் வழி யொழுக வேண்டி வருமேயென்னில், அற்றன்று. நல்விலக்கணங்கொண்டாராயப் புகுங்கால், அவற்றியல்பெல்லாம் பிறழுதலி, னவைநம்மனோரால் வெறுத்தொதுக்கப்படு மியல்பிற்றேயாமென்க. அவ்வச் சமயிகளுந், தத்த நூல்களையும் இறைவனருட்பெற்றோரே இயற்றினரெனக் கூறுகின்றாரே யென்னில், அந்நூல்களிலே, இலக்கண தருக்க வழுக்கண்மலிந்துள்ளன வாதலினாலும், இறைவனருட்பெற்றுப் பதிஞானத்தை யடைந்துள்ளோர் அங்ஙனமாய வழுக்களுட்புகுந்து மயங்காராதலினாலும், நமது சித்தாந்த நூல்களுளங்ஙனமாய வழுக்கள்யாண்டுங் காணப்பெறாமையினாலு மன்னோர்கூற்றுப் பொருந்தாதென மறுக்க. அங்ஙனமாயின், இலக்கண தருக்கநூல்களில் வல்லார் செய்த நூல்களும் மெய்ந்நூல்களெனப்படுமாலோ வெனில், அவரெல்லாம், எத்துணைக்கூர்ந்தமதியுடையரேயாயினும் கிஞ்சிஞ்ஞரேயாதலின், யுத்திக் கதீதமாயுள்ள இறைவனதியல்பையும் முத்தியிலக்கணத்தையு முணர்த்துமாற்றல் பெற்றுள்ளா ரல்லரேயாமென்க. அங்ஙனந் தமது சிற்றறிவுகொண்டு முற்றுணர்வுடைய முதல்வனதிலக்கணமாகிய யுத்திக் கதீதமான விஷயங்களை யுணர்த்தப் புகுங்காற் றந்நெறி பிறழுவரேயாமென்ப தொருதலை. இறைவனூல் யுத்திக்கதீதமாயிருப்பினு மொருவாற்றானும் யுத்திக்குமாறுபடவேமாட்டாது. யுத்தியினாற் சிறந்த மனுடன், தக்க கருவிகொண் டளக்குங்கால், இது கடவுளா லருளிச்செய்யப்பட்டது, இது பிராந்தனாற் செய்யப்பட்டதெனப் பகுத்துணரும் ஆற்றலொன்றுமாத்திரம் பெற்றுடையனேயாம்.

எங்ஙனமாயினுமாகுக. பதி பசு பாச மூன்றும் அனாதியேயாயிற், பின்னைய இருபொருளும் பதியினதிலக்கணத்தைப் பெறாதொழிதற் கேதுவென்னையெனின், ஓரிலக்கணம் பொருந்தினால் ஒன்பதும் பொருந்தவேண்டுமென்ப தெதனாற் பெறப்படும்? கரியனவெல்லாங் காக்கையாகவும், வெண்ணிற முடையனவெல்லாம் பாலாகவும் பெறப்படினன்றோ அங்ஙனம் பொருந்துமென்க. பதியும் பசுவும் அனாதியேயாயிற் பிறவி எக்காலத் துண்டாயதெனின், "என்றுளைநீயுமற் றன்றுளேம்யாமெனற் கையம் வேறின்றே" எனவும், "என்றுளைநீயன் றுளம்யாம்" எனவும் வரும் மேலோர்வாக்குக்களினாற் பிறவி பிரவாகனாதியாய்த் தொடர்ந்துகொண்டே வருகின்றதென்க. இனியஃதிடையிலே வந்ததெனக்கோடின், நியாயவிரோதங்களெல்லாம் மலைபோல வந்தெய்தித், தேளுக்கஞ்சிப் பாந்தள்வாய்ப்பட்டவாறாகவன்றோ முடியும்! இங்ஙனமாய வதீத விஷயங்களெல்லாம், பாசநீக்கத்துத் திருவருளுணர்த்த உணர்தற்பாலனவேயாம். ஆன்மாக்களுணர்த்

தவுணருமியல்புடையன வாதலினாலும், சிற்றறிவுடையன வாதலினாலு மவற்றிற்கு முற்று முணருமாற்றல் வருமாறுசெய்தல் கடவுளாலு மியலாததொன்றேயாம். இயற்கை விரோதம் யார்மாட்டுஞ் செல்லாதென்பது, தத்துவநூல்வல்லார் யார்க்கு முடம்பாடேயாம். பிறவிகடோறு மீட்டிய புண்ணியப் பேற்றினால், இருவினையொப்பு மலபரிபாகமுமெய்திச் சத்திநிபாதமுற்றபரிபக்குவர்க்குப், பதியே குருவையதிட்டித்துவந்து, சோபானமுறையா னுணர்த்துங்காலத்துப், பாசஞான பசு ஞானங்களை யொழித்துப் பதியறிவே கண்ணாகக்கொண்டு காணுமனோர்க்கே இவ்விரகசியங்களெல்லாம் புலப்படுமியல்பிற்றென்க.

இங்ஙனமேயாயின், ஏனைச் சமயானுசாரிகளுக்கெல்லாம் முத்தியின்றாமோவெனின், "யாதொருதெய்வங்கொண்டீரத்தெய்வமாகி யங்கேமாதொருபாகனார்தாம் வருவர்" என்றற்றொடக்கத்த திருவாக்குக்களினாலே யாரும் முத்திபெறத்தக்கவரேயாமென்க. புறச்சமயம்முதல் அகச்சமய மீறாயுள்ள இருபத்துநான்கு சமயிகளும், அவற்றுணின்று விரிந்தசமயிகளும் சோபானமுறையே எறியேறி, ஈற்றிலே சைவக்கூற்றின் முடிவாகிய சித்தாந்தநெறியைத் தலைப்பட்டுச், சரியையாதி நான்கு பாதமாய்ப், பதினாறாய், முப்பத்திரண்டாய், இன்னும் பலவாய் விரியும் ஞானபாதத்தை முறையானே அனுட்டித்து, முப்பத்தாறு தத்துவங்களுளடங்கிய [illegible]முத்திகளைப்பெற்றுப், பின்னர் ஞானத்தின் ஞானமாகிய நிட்டையையடைந்து, முப்பத்தாறுதத்துவங்களையுங்கடந்து அப்பாலாய் நிற்குஞ் சொரூப சிவனோ டிரண்டறக்கலத்தலாகிய சுத்தாத்துவித முத்தியை யடையப் பெறுவர். "கரும்பைத்தேனைப் பாலைக் கனிமுதைக் கண்டைக் கட்டியை யொத்திருப்பனந்த முத்தியினிற்கலந்தே" என்று அருளிச்செய்தார் சகலாகமபண்டிதரும். அத்துவிதமென்றசொல்லின் பொருளை, "அத்துவிதமென்ற மொழி மாத்திரையானே ஏகமென்னில் ஏகமென்றுசுட்டுவதுண்மையின் அத்துவிதமென்றசொல்லே அன்னியநாத்தியை யுணர்த்துமாயிட்டு" என்னும் மெய்கண்டதேவரது வார்த்திகப்பொழிப்பானுணர்க. இங்ஙனங் கூறிப்போந்தவேதுக்களினாலே சித்தாந்த சைவமொன்றே விசேடமுடையதென ஒருவாறர்த்தாங்கீகாரஞ்செய்யினும், இந்நிலையை அனுசரிப்போர் தென்னிந்தியாவிலே கற்றவராகிய சிலரும், யாழ்ப்பாணத்தவருமே யன்றிப் பெரும்பாலார் இந்நிலையை அனுசரிக்கவில்லையே யென்னில், வைரக்கற்கள் சிலவும் ஏனையகற்கள் பலவுமாயிருத்தல்பற்றி வைரக்கற்களைக் குறைவாக மதியாதவாறுபோலவும், நல்லோர் சிலரும் தீயோர் பலருமாயிருக்கும் ஏதுப்பற்றி நல்லோரைக் குறைவாக மதியாதவாறுபோலவும், சித்தாந்த சைவர்கள் குறை

ந்த தொகையினராயிருக்கும் எதுவொன்றேகொண்டு அதனைக் குறைவுபடு த்தல் நியாயவிரோதமேயாமென்க.

இவைகளேயன்றிச் சமயகுரவர்கள், சந்தான குரவர்கள், பட்டணத்த டிகள், குமரகுருபரசுவாமிகள், தாயுமானசுவாமிகள் முதலிய மகாஞானிக ளெல்லாம், நமது சித்தாந்த சைவத்தையே அனுசரித்து அதன்வழி யொழு கியே வீடுபேறடைந்தாரென்று உண்மை நூல்களெல்லாம் மிகமுழங்கிக்கூறுதலினாலும், அதற்கவர்கடிருவாக்குக்களினின்றெழுந்த அருட்பாக்க ளே மறுக்க வியலாத பெருஞ்சான்றாக இன்றுவரை அறிவாற் சிறந்த பெரி யோரெவரானு மங்கீகரித்துத் தோத்திரஞ் செய்யப்பட்டு வருதலினாலும், அவர்தமடியார் தமடியார்க்கு மடியரல்லாத புழுத்த நாயினுங் கடையரேமா கியநாமெல்லாம் அவர்கண்டு காட்டியவழியைப் பற்றியொழுகி நல்வழிபெ ற்றுய்தலே நம்மவர்க்கெல்லா முரிய கடப்பாடேயாமென்றும், அங்ஙன மொழுகுதலை யொழித்து, ஆணவமலத்தடிப்பினாலே சிவபெருமானையும், அவரது திருவருள் வழிப்பட்ட அம்மகாஞானிகளையு மிகழ்ந்து, புதுவழிகற் பித்து, நம்மையும் பிறரையு மொருங்கேகெடுத்துக், கோடி கற்பகாலத்தும் மீளரிதாகிய கொடிய நரகயாதனைக் காட்பட்டொழுகப் புகல்உய்தியில்ல தோர் பெருங்கொடுமதி பாதகமேயாமென்று முய்த்துணரத்தக்கதேயாம். இவற்றையெல்லாம் பிரமாணங்கொண்டு விளக்கப்புகின் விரியுமென்றஞ்சி யொழித்தாமென்க.

தீமையையும் அஞ்ஞானத்தையுங்கெடுத்து, நன்மையையும் பத்தியை யுங் கொடுத்து ஆன்மாக்களை வீடேறச்செய்யவல்லது நமது சித்தாந்தசைவ மேயாம். இது பண்டைக்காலமுதல் இன்றுவரையாயுள்ள பெரியோரது அனுபவசித்தாந்தமாம். இனியிவற்றையெல்லாந் தனித்தனிவிரிக்கப்புகின் விரியும். இதுகாறுங்கூறிப்போந்த நியாயங்களினாலே, நமது சுத்தாத்து வித சைவசித்தாந்தமொன்றே இலக்கணதருக்க நெறிக்கும் சுருதியுத்தி யனுபவங்களுக்கும் மாறுபடாத உயர்ந்த நெறியேயாமென்பதும், ஏனைய சமயங்களெல்லாம் இம்மேனிலையை யடைதற்குரிய சோபானங்களேயாமெ ன்பதும், இந்நிலையினின்றோர் மகாஞானிகளேயாமென்பதும், இம்மைமறு மை யிரண்டிற்கும் இதுவே ஏற்றவழியாமென்பதும் சுருதியுத்தி யனுபவ ங்களைக்கொண்டு ஒருவாறு சுருக்கி விளக்கியவாறாயிற்று.

இங்ஙனம்

சு. சரவணமுத்துப்பிள்ளை,

யாழ்ப்பாணம் உதயபாநுப் பத்திராதிபர்.

சரீர சுகம்.

நாம் ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொள்ளும்போது கேட்டுக் கொள்ளும் முதற்கேள்வி "க்ஷேமமா?" என்பதே. எவர்க்கேனும் கடிதம் எழுதும் காலத்தும் நம் க்ஷேமத்தை அவர்களுக்கு அறிவிக்கவும், அவர்களுடைய க்ஷேமத்தை நாம் அறியவும் விரும்புகிறோமன்றோ? உபசாரத்தின் பொருட்டோ, உண்மைக்கவலையினாலோ நாம் இவ்வாறு இன்றும் செய்துவருகிறோம். க்ஷேமம்விசாரிப்பது பெரும்பாலும் வழக்கத்தையும் உபசாரத்தையும் பொறுத்தவிஷயமாகப் போய்விட்டது மெய்யே; ஆயினும் இவ்விசாரணையால் தேகசௌக்கியம் எவ்வளவு முக்கியமும் அவசியமும் அருமையுமானது என்பது புலப்படும்.

உள்ளபடியே இச்சரீரமானது இருமைப் பயன்களுமாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள்களையும்பெற்று அனுபவிப்பதற்குக் கடவுளால் அருளப்பட்டகருவி; ஆதலால் நாம் அதை உபேட்சை செய்யாமல் கருத்தாய்க் காத்து ஏற்றபடி சரியான நெறியில் உபயோகித்துவரவேண்டியது. இவ்வாறு செய்வது நமது கடமைகளில் தலைசிறந்ததொன்றாம்.

"துதிவாணி வீரம் விசயம்சந் தானம் துணிவுதனம்
அதிதானி யஞ்சவு பாக்கியம் போகம் அறிவழகு
புதிதாம் பெருமை அறங்குலம் நோயகல் பூண்வயசு."

என்றபதினாறு பேற்றினையும் சரீரசுகம் ஒன்றிருந்தால் மட்டுமே அனுபவிக்கமுடியும்.

நோயாளிக்கு இடம் பொருள் ஏவலாதிய எவ்வளவு இருப்பினும், அவற்றால் உண்டாகும் இன்பத்தை அனுபவிக்க அவனால் ஆகாதாதலால், அவன் உடையோனாயினும் வறியனே ஆவன். சொத்துச் சுதந்திரம் ஏதும் இல்லாதானாயினும் சுகசரீரம் உடையவன் வயிறார உண்டு நிர்ச்சிந்தனையாக நித்திரைசெய்து வறுமையின் கொடுமைதோன்றாமல் ஆநந்தம் அனுபவித்தலால் அவன்வறியோனாயினும் உடையனேயாவன்.

மேலும், சுகசரீரமுடையவனே தன் சொந்தவேலையைச்செய்ய வும் பிறர்க்கு இயன்ற உதவிபுரியவும் கூடும். நோயால் வருந்துகிற வனோ தானும் சுகம் அடையாமல் பிறர்க்கும் பயன்படாமற் போவ தோடு, தனது உற்றார் பெற்றோர் உடன்பிறந்தோராகிய சுற்றத்தார் க்கும் பெரும் பாரமாகி அவர்களையும் தன்பொருட்டுக் காலநஷ்டத் திற்கும், திரவியச்செலவிற்கும், கடனுக்கும் உள்ளாக்கிப் பலவிதத்தி னும் வியாகுலத்தை விளைவிக்கின்றான்.

அன்றியும், சுகசரீரியே "மெய்த்திருவந் துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கும் உள்ளத்து உரவோன்." அவனே உலை யாமுயற்சியை ஆதரவாகக் கொண்டு எடுத்த காரியத்தைச் சாதித்து முடிக்கவல்லான். நோயாளிக்கோ ஊக்கம் குலைந்து ஏக்கம் மிகும். அவனுக்கு அற்பத்தோல்வியும் அதிகமாகத்தோன்றும்.

இம்மட்டோ? தேக ஆரோக்கியமே நன்னடக்கைக்குக் காரண மாக இருக்கிறது. திடசரீரம் உள்ளவனுக்கே தெளிந்த புத்தியுண்டு. ஆதலால் பெருந்தன்மை, தைரியம், சந்துஷ்டி, யோக்கியம் முதலி யன சுகசரீரிக்கே உண்டு. தேகவலியில்லாதனுக்கோ மனவலியிராதாத லால், அவன் தீராச்சந்தேகியும் சந்துஷ்டியில்லாதவனுமாகி, பொய் குறளை வெளவல் அழுக்காறுதிய அற்பகாரியங்களிற் பிரவேசிப்பான்

இதுகாறும் கூறியவாற்றால் மானிடஜன்மத்துக்குரிய கடமைக ளைச் செய்யவும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சிறந்தபொருள்களைக் கிரமமாக உபயோகித்து அனுபவிக்கவும், பிறர்க்குச் சுமையாய் இரா மல் சகாயமாய் இருக்கவும் வேண்டுமானால், இயன்றவரை தேகசௌ க்கியந் தவறாமல் வாழவேண்டுமென்பது இனிது விளங்கும்.

நோயற்ற வாழ்வினும் பெரும்பேறு வேறொன்றும் இல்லை; ஆயி னும், நிழலின் அருமையை வெயிலிற்சென்ற பின்னரே நன்குணர் வோரைப்போன்று, அநேகர், தம் சுகம்குன்றியகாலத்தில் தான் ஆரோக்கியத்தின் அருமையை உணர்ந்து அறிகின்றனர்.

சுகவீனமுற்றுத் துன்புறுவதற்கு உண்மைக்காரணம் அறிய ஆற்றலும், ஆவலும் அக்கறையும் இல்லாதார், அது "விதிவச"த்தால் நிகழ்வதன்றும், கண்கெட்ட பாழான தெய்வத்தின் குரூரக்கிரிய

கையென்றும், எண்ணியும் கூறியும் நொந்தும் திருப்தி அடைகின்றனர். இது முற்றிலும் தவறு. தன்முயற்சியுள்ளவர்க்கே தெய்வம் துணைசெய்யும். தமது மதிக்குறைவாலும் சொந்தத் தவறுதல்களாலுமே மனிதர்கள் நோயால் பிடிக்கப்படுகின்றனர்.

சுகாதாரவிதிகளை மீறிநடப்பதே நோயுறுவதற்கு முக்கியகாரணம் ஆகும். வாலிபத்தில் தங்கள் சுகத்தைப்பேணுமல் அநேகர் துன்மார்க்கிகளாகிப் பலவிதத்தினும் தங்கள் உடம்பைக்கெடுத்துக் கொள்ளுகின்றனர். இவர்களுடைய துற்செய்கைகளால் வரும் தீங்கு தக்ஷணமே புலப்படுவதில்லை. ஆதலால் "முற்பயக்கும் சின்னீரவின்பத்தின்" "பிற்பயக்கும்பீழைபெரிது" என்று உணராத இவர்கள் சிறிதுகாலம் சுகமும் பலமும் உள்ளவர்களாகக் காணப்படினும் அந்தோ! இவர்கள் அறியாமலே இவர்கள் விதைத்த பிணிவித்துக்களும் பலவீனவிதைகளும் வேரூன்றி முளைத்து கொஞ்சகாலத்துக்குள் வேலைசெய்ய ஆரம்பித்துவிடுகின்றன. இப்பிஞ்சில் பழுத்தவர்கள் 30-வயது ஆகுமுன்னரே தொண்ணூறுவயதுசென்ற கிழவர்கள் போன்று

"நரையொளி பிறங்கிஉடம்பெலாந் திரைந்து
நரம்புகள் தெரிந்திட வறந்து
தெரிதரும் கட்பாவையின்ஒளி மழுங்கி"

அகாலமரணத்திற்கும் அகால வயோதிகத்திற்கும் ஆளாகின்றனர் கூடியவரை நல்லொழுக்கம் உடையோராய் இருந்து தம் சரீரத்தைப் பாலியத்திற் பாதுகாத்துக்கொண்டவர்களோ, வயோதிக பர்வத்திலும் வாலிபர்போன்று சுகமும் பலமும் மிகவாய்ந்தவர்களாய் இருக்கின்றனர். இவ்விருதிறத்தாரையும் நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம்.

சிலர் வியாதிகளைப் பிதிரார்ஜிதமாகவும் மாதிரார்ஜிதமாகவும் (அதாவது பெற்றோர்வழிப்) பெறுவதுமுண்டு. இப்பெற்றோரும் பால்யத்தில் கெட்டழிந்தே வியாதிசம்பாதித்தவர்கள் என்றறிக.

செல்வவான்கள் சோம்பலினாலும் பணக்கொழுப்பினாலும், ஏழைகள் வறுமையினாலும் அதனால் நேரும் முட்டுப்பாட்டாலும் கண்ட

கண்ட இடங்களில் குடியிருந்தும் தகாத அன்னாகாரங்களைப் புசித்தும் உரியகாலங்களில் நித்திரைசெய்யாமலும், எண்ணெய்தேய்த்துக்கொள்ளாமலும் க்ஷௌரம்பண்ணிக்கொள்ளாமலும் பேதிமருந்து வாந்திமருந்து உட்கொள்ளாமலும் அம்மைகுத்திக்கொள்ளாமலும் சரீரசௌக்கியத்திற்கேதுவான மற்றவிதிவிலக்குகளைக் கவனியாமலும் வியாதியில் வீழ்கின்றனர்.

இவற்றைத்தவிர வியாதி அஃதில்லாவிடத்தில் உண்டாவதற்கும் அங்குப்பரவுதற்கும் காரணம் யாதெனில் உற்சவாதிகாலங்களில் தொத்துவியாதியினால் பீடிக்கப்பட்ட ஜனங்கள் நாலு இடங்களினின்றும் திரள்திரளாக அங்குவந்துகூடுவதே. நிற்க.

இதுவரைசொல்லிய விஷயங்களால் நமது தேகவலிமை குன்றி அழகொழிந்து மனஉற்சிமாறுவதற்கும் நீங்காவேதனைக்கும் உள்ளக்கவலைக்கும் அகால மரணத்திற்கும் காரணமானதுவியாதியே என்பது விளங்கும்.

வெள்ளம் வருவதற்கு முன்னர் அணைகோலிவையாமல் அது பெருகுதற் கண் போடப் பிரயத்தனம்செய்வது அறிவீனமல்லவா? அதுபோலவே சகல கேட்டிற்குங் காரணமாகிய வியாதி அணுகாதபடி முன்னுக்கு முன்னாலேயே தடுத்துக்கொள்ளாமல், அதுவந்தபின் தீர்த்துக்கொள்ள முயல்வது வருத்தத்தைத் தரத்தக்கதும் ஒருவேளை கைகூடாமற் போகக்கூடியதுமேயாகும்.

எல்லாநோய்களையும் அண்டவொட்டாமல் தடுக்க எவராலும் இயலாதெனினும், தேகசௌக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்குத்தகுதியான வகையை யாவரும் தெரிந்துகொண்டால் பலவியாதிகளைத் தலையெடுக்கவொட்டாமல் இயன்றவரை தடுக்கலாமன்றோ? இவ்வாறு தடுக்கப் பலவழிகள் உண்டு. அவற்றுள் சிலவருமாறு:—

(1) தரைமட்டத்திற்குத் தாழ்வாய் இராததும், தண்ணீர் ஊறித்தங்காததும், வருஷத்திற்கிருமுறைவெள்ளையடிக்கப்பட்டதும், காற்றோட்டத்திற்குப்போதுமான பலகணிகள் பலகொண்டதும், துர்நாற்றமுள்ள குப்பை முதலிய அசுத்தங்களால் சூழப்படாததுமான வீட்டை வசிப்பிடமாகக்கொள்ளல் வேண்டும்.

(2) அந்தந்தத்தேசத்திற்கும் அவ்வக்காலத்திற்கும் ஏற்ற ஜீரணிக்கத்தக்க சுத்தபோஜனத்தையும் அழுக்கு இல்லாத தெளிந்தநீரையும் அருந்தவேண்டும்.

(3) அவயவங்களில் அழுக்கேறாதபடி தேய்த்துக் குளித்து தோய்த்துலர்ந்த மாசிலா உடையைத்தரிக்கவும், தீண்டத்தகாத மனிதரையும் மிருகங்களையும் பொருள்களையும் தீண்டாமல் இருக்கவும் வேண்டும்.

(4) வியாதிகள் மிகுதியாய்ப் பரவக்கூடிய காலங்களில் அவை அணுகாதபடி வீட்டை வெள்ளையடித்து செங்கல் தரையையும் மண் தரையையும் பசுவின்சாணம்கொண்டு மெழுகவேண்டும்,

(5) பகற்பொழுதும் அந்திப்பொழுதும் தூங்காமல் சாமத்துறங்கி வைகறைபிற்றுயிலெழவேண்டும்.

(6) ஜீரணக்கருவிகளும் உதிரக்கருவிகளும் சுவாசக்கருவிகளும் தத்தம்வேலையைச் சரிவரச்செய்யுமாறு நாள்தோறும் உடம்பு வேர்த்துக்களைக்க வேலைசெய்யவும், சுத்தவாயுஉள்ள இடங்களில் ஓடி விளையாடவும் வேண்டும்.

(7) "சனிபுதன் தனில்எண்ணெய்நிவந்நீரில்மூழ்குவார்சாருமிள
[வெயில்விரும்பார்
தம்வயது மேலான மங்கையைச் சேரார்சதாகாலம் வழியில் நடவார்
பனியிலும்காற்றிலும்மெய்வருந்தார்மடைப் பள்ளியிற்சேவகமிரார்
பழங்கறியருந்தாரிரண்டடக்காரென்றுபல்காலமும்விட்டிடார்
கனிபொடுகிழங்குகள்மிகுந்தபுசிபார்பல கலந்தன்றிபுணவுசெய்யார்
காய்ச்சுபால்உண்பர்நீர்மோர்கூட்டுவார்தினம்காவேரிதனில் மூழ்குவார்
மனிதரிவர்பேர்சொன்னபேர்க்குநோய்வருகுமோ."
என்பதைச்சிந்தித்து ஒழுகவேண்டும்.

(8) ஆறுமாதத்திற் கொருமுறை வாந்தியாகும்படியாகவும், நான்குமாதத்திற்கொருதரம் பேதியாகும்படியாகவும் மருந்துண்ண வேண்டும்.

தம்மாலியன்ற அளவு முற்கூறியவாறு வியாதிகளைத் தடுத்தும் நோயணுகுமாஞல் அக்காலத்தும், தாமேதமது அறியாமையாலும் அறிந்தவழியும் அசாக்கிரதையினாலும், நோய்வலிபத்தேடிக்கொண்ட

காலத்தும் வியாதிஸ்தர்கள் தமது நோயின் நிலைமையைச் சிறிதும் ஒளியாமல் உடனுக்குடனேயே உள்ளபடி வைத்தியனுக்குக் கூறி அவன் விதிக்கும் பத்தியம்தையும் ஔஷதத்தையும் பக்திவிசுவாசத்துடன் கொண்டு அபந்தியத்தைவிலக்கவேண்டும். இங்ஙன்மே ஒழுகின் சுகசரீரிகளாக வாழலாமென்பது திண்ணம். "நோய்க்கிடங் கொடேல்" என்றமுதுமொழி நோக்கத்தக்கது. "நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம்" என்பதனால் நோயுற்றவர்வாழ்வுநிறைவுற்றதாயினும் குறைவுற்றதேயென்றும், நோயற்றவாழ்வு வறுமையுற்றதாயினும்அதுவேகுறைவில்லாதபெருஞ்செல்வவாழ்க்கையாமென்பதும் நன்குவிளங்கும்.

A. M. துரைஸாமி ஐயர். B. A.

புறங்கூறுமை.

"பொய் குறளை வன்சொல் பயனில என்றிந்நான்கும் வாய்க் குற்றம் என்பர் மேலோர். இவற்றுள் 'குறளையே' புறங்கூறலாம்

குறளை, கோள்சொல்லுதல், கௌவை ஆகிய இவை புறங் கூறல் என்னும் ஒரு பொருள் குறித்த பல சொற்களாம்.

புறங்கூறலாவது ஒருவரில்லாதகாலத்து அவரை இகழ்ந்து உரைத்தல்.

புறங்கூறுவதால் உண்டாகும் தீங்குகள் அனந்தம். புறங்கூறுபவரை அவரது உறவினரும் விட்டு நீங்குவர். நெருங்கிய சிநேகர்களாக இருப்பவரும் விட்டுப்பிரிவர். எப்படியெனில் புறங்கூறித்திரிவோன், ஒருவன் பிறனுடைய அற்பப்பழியொன்றை அவனைக் காணுவிடத்து அஞ்சி வெளியிடுவானாயின், அவ்வற்ப சந்தோஷியின் பெரும்பழிகள் பலவற்றை புறங்கூறப்பட்டவன் அவனுக்கு எதிரிலேயே நின்று சிறிதுமஞ்சாமல் அவன் மனம் வருந்தச் சொல்லி அவனை நாணித்தலை கவிழ்ந்து வாயடங்கச் செய்துவிடுவான். அன்றியும் யோக்கியர்கள் அதனைச் செவியுறுவாராயின் அவனுடைய தீக்குணத்திற்காகவும், பிறர்பால் தம்மைப்பற்றியும் பழி தூற்றக்கூடு

ம்என்ற எண்ணத்தினுலும், அவனேடு சேர்ந்து உறவாடுதலை நிறுத்திவிடுவார்கள். 'கௌவைச் சொல்லின் எவ்வருக்கும் பகை' யன்றே.

இத்தீக்குணத்தால் கூறுவோக்குமட்டுமேயன்றி பிறர்க்கும்கேடுண்டு. எப்படியெனில் ஒருவனுக்குப் பழிப்புண்டாகும்படி பேசுவதனுல் அவனுடைய பெயர் கெட்டுப்போகிறது. அவன் வருவாய் குன்றி வருந்தும்படியும் ஆகிறது. அன்றியும் அறியாதார் அவனை அவமதிக்கவும் அருவருக்கவும் புறங்கூறல் இடம் தருகிறது. இக்காரியங்களால் நிஷ்காரணமாய் நிரபராதிக்குக் கூட மானக்கேடுஉண்டாகிறது.

புறங்கூறலால் நேரும் கொடுமைக்குக் கூனியின் கூற்றே சான்று:

தசரத சக்கரவர்த்தி தனது முக்கிய மனைவிமார் மூவருள் மூத்தவளான கோசலைப்பிராட்டியின்குமாரன் ஸ்ரீராமனுக்குமுடிசூட்டச் சித்தமாயிருப்பதைக் கேட்டு அவனது இளைய மனைவி கைகேயியின் வேலைக்காரியான மந்தரையென்னும்பெயருள்ள கூனி கைகேயியிடம் சென்று இராமன்மேற் சில குற்றங் குறைகள் கற்பித்துக் கூறி அவள் மனத்தைக் கலைத்து ஸ்ரீராமனிடம் பகைமூட்ட அவள் தன்கணவனிடம்சென்று தான்முன்னொருகால் வாக்குத்தத்தமாகப் பெற்ற இரண்டு வரங்களுக்கிடாக இராமனைக் காட்டுக்கனுப்பி பரதனுக்கு நாடு கொடுக்க வேண்டுமென்று வேண்ட, அதனுல் இராமன் வனவாசஞ் செய்ய வேண்டி வந்ததும், தசரதன் புத்திரசோகத்தால் மரித்ததும் அறியாதார் யார்?

புறங்கூறுவோர் கீழ்மக்களே; பலவகை மலர்காய், கனிகள் நிறைந்த சோலையில் காக்கை கசப்பான வேப்பம் பழத்தையே விரும்புதல்போல, இக்கீழ்மக்கள், பலவகை நற்குணங்களும்நிறைந்த ஒருவரிடத்திலுள்ள அற்பக் குற்றத்தையே பாராட்டிப் பலருமறிய பறைசாற்றுவர். 'நகச்சொல்லி நட்பாடல், தேற்றுது பகச்சொல்லிக்கேளிர் பிரிக்கும், இப்பேதைமாக்கள் நல்ல பாம்பினும் கடு நஞ்சுடையவர்களே. இவர்களைக்கண்டால் எத்துணை சாமர்த்தியமுடையவர்களும்அதிஜாக்கிரதையாகவேஇருக்கவேண்டும். இவ்விஷயத்தை

"முன்னின் ஒருருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்
றிழித்துரைக்குஞ் சான்றோரை அஞ்சியே தேவர்
விழித்திமையார் நின்ற நிலே."

என்று திருமுனைப்பாடியாரும் சமத்காரமாய் வற்புறுத்துகிறார். இப்பாட்டின் கருத்து யாதெனில், ஒருவனைக் கண்டபொழுது மட்டும் முகமலர்ச்சி காட்டி வாயாலும் (மனங்கலந்து பேசுபவர் போலக்) கல்லுமுருகும் படிக் கனிவாகப் பேசி அவன் காணுதபொழுது அவனையே புறங்கூறும் அற்பர்களின் தன்மைக்கஞ்சியே தேவர்கள் எப்பொழுதும் கண்மூடாது விழித்தே நிற்பாராயினர் என்பதாம். நிற்க.

போகவிட்டுப் புறங்கூறித்திரிவதற்குப் பிறருடைய செல்வம், புகழ், கல்வி முதலியவற்றைக் காணும் பொழுதுண்டாகும் அழுக்காறே, முக்கிய காரணமாகும். ஆயினும் தமக்கென வேறொருதொழில் முயற்சியுமில்லாமல் சோம்பித்திரியும் வம்பர்கள் சிலர், தாம் கெட்டசுபாவம் உடையவர்களென்று தெரியாமலும், பகைமைக்குக் காரணம் ஏதுமின்றியும், பிறரை நகைக்கச் செய்து அதனுல் தாமும் சந்தோஷமடைய வேண்டுமென்ற கருத்துடனேயே பலருடைய குறைகளை எடுத்துச் சொல்வதே தொழிலாக் கொண்டு காலங்கழித்து வருகின்றனர். இன்னோரைக்காண்டல், வேறுபயன் ஏதுமின்றிக், கேவலம் உடம்பு அடித்தலே பார்க்க விரும்பிப் பிறரைக் கன்னத்தை உடைத்துக் கொல்லுபவனைக்கண்டால் எப்படி அஞ்சவேண்டுமோ அவ்வாறே அஞ்சி அகலப்போதலே அறிவுடையோர்க்கழகு. இதுபற்றியன்றோ குமரகுருபர சுவாமிகளும்,

"பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனுக் கொள்வான்—பயமின்று
மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக் கொல்வான்போல்
கைவிதிர்த் தஞ்சப்படும்" என்றனர்.

மணலிலே முழுகி மறைந்திருக்கிற தவளே சும்மா இராமல் தன் வாயால் ஒலித்துக் குரல்காட்டுதலால் இஃதுள்ள இடத்தைப் பாம்பு அறிந்து அதனைப் பிடித்துக்கொள்ளுதல் பற்றி அழிவடைகிறது

போல, காணுவிடத்தில் சும்மா இராமல் தன் வாயால் பழிமொழி கூறுகிறவன், பிறர் தனது தீக்குணத்தை அறிந்து வருத்துதலால் துன்பமுற்று அழிவான்.

இதுவரை சொல்லியவற்றினின்றும் "படிறும் பயனிலவும் பட்டி உரையும் வசையும்" கலந்து தோன்றப்பெற்றதும், அதர்மங்கள் யாவினும் அறக் கொடியதுமானது புறங்கூறல் என்பது தெள்ளிதிற் புலப்படும். பழிபாவத்திற் கிடமான இம்மொழிக் குற்றத்தை விலக்க விரும்பும் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள் சிலவுள:—

முதலாவது:—பழிப்பன பகர்தற்குக் காரணமாயுள்ள மனக்குற்றமாகிய அழுக்காற்றை நீக்க இயன்றவரை முயலவேண்டும்.

இரண்டாவது:—புறங்கூறுதலாகிய பிறர்குற்றத்தை ஆராய்வதை நிறுத்தி புறங்கூறலாகிய தங்கள் குற்றத்தைச் சிந்திக்க வேண்டும்.

மூன்றாவது:—பிறர் பிறர் சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காக்கவும் நா காக்கவும் வேண்டும். ஆனால் ஒருவன் செய்யும் குற்றங்கள்யாவும் உண்மையாயிருந்து அக்குற்றங்களை வெளியிடுவதனால் உலகத்திற்கு நன்மை உண்டாவதாய் இருக்குமானால் அவசியம் வெளியிட்டுத் தீரவேண்டியதே. ஆயினும் கூடுமானால் அவனைத் தனித்தழைத்துப் புத்திபுகட்டி நல்லவழிப்படுத்துவதே நன்மை.

ரா. சேதுபதி.

விநோதக்கூற்று.

தாய்:—இந்தாடி லக்ஷ்மி. அம்பி ஞாபகமில்லாமல் தானே அவ்வளவு பக்ஷணத்தையும் தின்னே?.

லக்ஷ்மி:—இல்லை அம்மா! நாந் திங்கிற போதெல்லாம் அம்பி ஞாபகந்தான் நேக்கு. எங்கே வந்தூட்றானோ இன்னு எண்ணிக் கிண்டேதான் தின்னேன்.

*　　*　　*　　*

உபாத்தியாயர்:— சாஸ்திரிகளே! தங்களுக்குச் சம்ஸ்கிருதம் தெரியுமோ?

சாஸ்திரிகள்:—தமிழில் சொன்னால் தெரியும்.

*　　*　　*　　*

சிறுபையன்:—அம்மா! இன்னிக்குப் பல்லிக்கூதத்திலே ஒரு பில்லே கிலேவிலுந்தான். விலுந்தா, எல்லோரும் சிரிச்சா நாமத்தும் சிரிக்கல்லே.

தாய்:—நீ ஏன் சிரிக்கல்லே?

பையன்:— என்னத்துக்கா ? என்னத்துக்கா. நான் தான் விலுந்தேன்.

*　　*　　*　　*

வீட்டுக்காரன்:—ஏன் கைக் கடியாரம் நின்று போயிருக்கிறது? யாரோ சேஷ்டை செய்திருக்கிறார்கள். அடீ உனக்குத் தெரியுமா?

மனைவி:—வாங்கி நாளாச்சாக்கும். ஆரு சேஷ்டை செய்ய வந்தா? கடியாரம் ஒக்கிட்ரவங்கிட்டக் குடுத்து அதைச் சுத்தஞ் செய்யணும்.

ஆறுவயதுள்ளபிள்ளை:—வாண்டாம் அப்பா. சட்டலேருந்து அம்பியும் நானும் எடுத்து அண்டாத் தண்ணுக்குள்ளே போட்டு அலம்பி சுத்தம் செஞ்சு ஆச்சு. சுப்புவை வேணும்னா கேளுங்கோ.

*　　*　　*　　*

உபாத்தியாயர்:—நாலு பேருக்கு நூறு பலாச்சுளை. ஒவ்வொருவருக்கும் என்ன வரும்?

கடைசிப்பையன்:— மூந்த (ஆவல்கொண்டு எல்லாருக்கும் முந்தி) வயித்துவலி. வயித்துவலி.

பிரயாணி:—மேலூருக்குப் போக வழி எதையா?

வழிப்போக்கன்:—புராணிகரைக்கேள்.

பிரயாணி:—புராணிகரைக் கேட்டால்? வழிகாட்டி மரத்தை யல்லவா பார்த்துச் சொல்ல வேண்டும்?

வழிப்போக்கன்:—புராணிகரும் கைகாட்டி மரமும் ஒன்று தானே. அவரும் போகிறவழியைக் காட்டுவார்; இதுவும் காட்டும். காட்டுகிற வழியில் அவரும் போகமாட்டார்; இதுவும் போகாது. எதானல் என்ன?

* * * *

நியாயாதிபதி:—டபேதார்! சத்தம்.

டபேதார் (கேஸ் முடிவை அறிய ஆவல்கொண்டு திரளாகக் கூடிய ஜனங்களைப் பார்த்து):—ஸைலன்ஸ்! ஸைலன்ஸ்! சத்தம் போடாதேயுங்கள். பேசி இரைகிறவர்கள் யாராயிருந்தாலும் தாட்சணியம் பாராமல் வெளியே தள்ளிப் போடும்படி கோர்ட்டார் அவர்கள் உத்திரவு. என்ன கெஞ்சினுலும் அப்புறம் உள்ளே வரக்கூடாது.

ஐந்து கொலைசெய்து விசாரணைசெய்யப்படும் கைதி:—ஹா, ஹீ, டப், புஸ், ஹி ஹி ஹி ஹோ. துரையவர்களே! போக வழிவிடச் சொல்லுங்கள்—நான் சத்தம்போட்டேன். என்னைக் கல்தாகொடுத்து வெளியே தள்ளிவிடுங்கள்.

* * * *

தருமவான்:—உமது உடையையும் நாமமடியையும் விபூதியையும் பார்த்தால் நீர் நல்லவர்போல் காணப்படுகிறீர். உமது காலட்சேபம் என்ன?

விக்கிரகமும் புத்தகமும் விற்கும் வியாபாரி:— காலட்சேபமா? கிரந்த காலட்சேபந்தான்.

தருமவான்:—அப்படியா—என்ன ஆச்சரியம் அதுபோதுமா? சாப்பாட்டிற்கு என்ன செய்கிறது?

வியாபாரி:—போதாததற்குச் சாமி தான் இருக்கிறது எனக்கென்ன கவலை?

க. ர. சா. நாராயணன்.

சமாசாரக்கொத்து.

ஸ்காட்லண்டில் உள்ள டின்பர்க் கலாசாலையில் இப்பொழுது 180 இந்திய மாணவர்கள் வித்தியாப்பியாசஞ் செய்துவருகிறார்கள்.

*　　*　　*

ஜப்பானில் 20 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் புகையிலைஉபயோகப்படுத்தக்கூடாதென்ற கண்டிப்பான சட்டம் பிறந்திருக்கிறது.

*　　*　　*

நார்வேயில் மரம்வெட்டவேண்டின் அதற்குப் பதிலாக வெட்டுவோன் ஒவ்வொருவனும் மூன்று புதுக்கன்றுகளேனும் ஊன்றித்தீரவேணுமாம்.

*　　*　　*

சாஸ்திரப் படிப்புக் கற்றுக்கொடுக்க ஒரு கலாசாலை ஏற்படுத்துவதன் நிமித்தம் மிஸ்டர் ஜாஸன் என்ற கோடீசுவரர் பம்பாய் துரைத்தனத்தாரிடம் 10 லட்சரூபாய் நன்கொடை அளித்திருக்கிறார்.

*　　*　　*

அமெரிக்காவில் உள்ள பிலாடல்பியாவில் சிறந்த புத்த விக்கிரகங்களும் கணேச விக்கிரகங்களும் 2 அடி உயரத்தில் சலவைக்கற்களால் செய்யப்பட்டு இந்தியாவிற்கு வருகின்றன. அவற்றின் விலை 150 ரூபாயாம்.

*　　*　　*

மலேயா தீபகற்பத்தில் தான் உலகத்தில் காணப்படும் நாணயங்கள் எல்லாவற்றிலும் மிகச்சிறிய நாணயம் வழங்குகின்றது. அந்நாணயம் ஒரு மரப்பிசினால் செய்யப்படுவது. அதில் 83 கொண்டது நமது ஒருபைசாவுக்குச்சரியாம்.